ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த

# ॥ ஏர்மலர்ப்பூங்குழல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஏர்மலர்ப்பூங்குழல் ॥

## ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கல்

‡ஏர் மலர்ப் பூங்குழல் ஆயர் மாதர்⋆
எனைப் பலர் உள்ள இவ்வூரில்⋆ உன்தன்
மார்வு தழுவுதற்காசையின்மை
அறிந்தறிந்தே⋆ உன்தன் பொய்யைக் கேட்டு⋆
கூர் மழை போல் பனிக் கூதல் எய்திக்⋆
கூசி நடுங்கி யமுனை யாற்றில்⋆
வார் மணல் குன்றில் புலர நின்றேன்⋆
வாசுதேவா! உன் வரவு பார்த்தே (1)

கெண்டை ஒண் கண் மடவாள் ஒருத்தி⋆
கீழை அகத்துத் தயிர் கடையக்
கண்டு⋆ ஒல்லை நானும் கடைவன் என்று⋆
கள்ள விழியை விழித்துப் புக்கு⋆
வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ⋆
வாள் முகம் வேர்ப்பச் செவ்வாய்த் துடிப்ப⋆
தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம்⋆
தாமோதரா! மெய் அறிவன் நானே (2)

கரு மலர்க் கூந்தல் ஒருத்தி தன்னைக்⋆
கடைக் கணித்து⋆ ஆங்கே ஒருத்தி தன் பால்
மருவி மனம் வைத்து மற்றொருத்திக்-
குரைத்து⋆ ஒரு பேதைக்குப் பொய் குறித்து⋆
புரி குழல் மங்கை ஒருத்தி தன்னைப்
புணர்தி⋆ அவளுக்கும் மெய்யன் அல்லை⋆
மருதிறுத்தாய் உன் வளர்த்தியூடே⋆
வளர்கின்றதால் உன்தன் மாயை தானே (3)

www.prapatti.com

தாய் முலைப் பாலில் அமுதிருக்கத்⋆
    தவழ்ந்து தளர் நடை இட்டுச் சென்று⋆
பேய் முலை வாய் வைத்து நஞ்சை உண்டு⋆
    பித்தன் என்றே பிறர் ஏச நின்றாய்⋆
ஆய் மிகு காதலோடு யான் இருப்ப⋆
    யான் விட வந்த என் தூதியோடே⋆
நீ மிகு போகத்தை நங்குகந்தாய்⋆
    அதுவும் உன் கோரம்புக்கேற்கும் அன்றே (4)

மின் ஒத்த நுண் இடையாளைக் கொண்டு⋆
    வீங்கிருள் வாய் என்தன் வீதியூடே⋆
பொன்னொத்த ஆடை குக்கூடல் இட்டுப்⋆
    போகின்ற போது நான் கண்டு நின்றேன்⋆
கண்ணுற்றவளை நீ கண்ணால் இட்டுக்⋆
    கை விளிக்கின்றதும் கண்டே நின்றேன்⋆
என்னுக்கவளை விட்டிங்கு வந்தாய்⋆
    இன்னம் அங்கே நட நம்பி! நீயே (5)

மற் பொரு தோளுடை வாசுதேவா⋆
    வல்வினையேன் துயில் கொண்டவாறே⋆
இற்றை இரவிடை ஏமத்தென்னை⋆
    இன்னணை மேல் இட்டகன்று நீ போய்⋆
அற்றை இரவும் ஓர் பிற்றை நாளும்⋆
    அரிவையரோடும் அணைந்து வந்தாய்⋆
எற்றுக்கு நீ என் மருங்கில் வந்தாய்⋆
    எம் பெருமான்! நீ எழுந்தருளே (6)

பை அரவின் அணைப் பள்ளியினாய்⋆
    பண்டையோம் அல்லோம் நாம்⋆ நீ உகக்கும்
மையரி ஒண் கண்ணினாரும் அல்லோம்⋆
    வைகி எம் சேரி வரவொழி நீ⋆
செய்ய உடையும் திருமுகமும்⋆
    செங்கனி வாயும் குழலும் கண்டு⋆

www.prapatti.com

பொய் ஒரு நாள் பட்டதே அமையும்⋆
புள்ளுவம் பேசாதே போகு நம்பீ (7)

என்னை வருக எனக் குறித்திட்டு⋆
இன மலர் முல்லையின் பந்தர் நீழல்⋆
மன்னி அவளைப் புணரப் புக்கு⋆
மற்றென்னைக் கண்டுழறா நெகிழ்ந்தாய்⋆
பொன்னிற ஆடையைக் கையில் தாங்கிப்⋆
பொய் அச்சம் காட்டி நீ போதி ஏலும்⋆
இன்னம் என் கையகத்தீங்கொரு நாள்⋆
வருதியேல் என் சினம் தீர்வன் நானே (8)

மங்கல நல் வனமாலை மார்வில்
இலங்க⋆ மயில் தழைப் பீலி சூடி⋆
பொங்கிள ஆடை அரையில் சாத்திப்⋆
பூங்கொத்துக் காதில் புணரப் பெய்து⋆
கொங்குநறுங்குழலார்களோடு⋆
குழைந்து குழல் இனிதூதி வந்தாய்⋆
எங்களுக்கே ஒரு நாள் வந்தூத⋆
உன் குழலின் இசை போதராதே (9)

‡அல்லி மலர்த் திருமங்கை கேள்வன்
தன்னை நயந்து⋆ இள ஆய்ச்சிமார்கள்⋆
எல்லிப் பொழுதினில் ஏமத்தூடி⋆
எள்கி உரைத்த உரை அதனைக்⋆
கொல்லி நகர்க்கிறை கூடல் கோமான்⋆
குலசேகரன் இன்னிசையில் மேவிச்⋆
சொல்லிய இன் தமிழ் மாலை பத்தும்⋆
சொல்ல வல்லார்க்கில்லை துன்பந் தானே (10)

॥ குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com